187

எம். பெருமாள் சேர்வை,
மோகனூர், நாமக்கல்,
சேலம்.

1/2.

"திருமூலர் எண்ணை முறை கோரக்கர்
வைத்திய வெண்பா கட்டு-5".

தேதி: 7.4.64.
ஓலைச்சுவடியின் பெயர்:- திருமூலர் எண்ணை முறை, கோரக்கர் வைத்திய வெண்பா
ஏடு-3.

உரிமையாளரின் பெயர்:- எம். பெருமாள் சேர்வை
இடம்: மோகனூர், நாமக்கல், சேலம்.

304

***

<u>திருமூலர் எண்ணை முறை:</u>

காதலே நந்தி நயவா யிரைத்த மொழி மாதாவே யென். தாயே மதேன். மனிய
ஆதாரமான ஆறுமுகத் தோன் தன் பாதம் மெகாந்த பூரணமும் மெய்ப் பொருளுங் காப்
பாமே.

1. ஆமென்ற நாற்றாக்கள் மானிடருக்கு அரிதரைக்கார் ஐக்கியவ் களனைகவ் கோர்வை
தாமென்ற கோர்வை நால் கிட்டாதென்று சாதகமா யப்பிரிவு அண்டாய்ப் பாடிநார்
கள்

கோனென்ற யிப்படியுந் தெரியாதென்று குக்கிலைத் தாரமின் பிஞ்சு எட்டுக் காயம்
வாவென்ற ஒருவரெட்டில் சிக்காதப்பா மைந்தனே பதினெண் பேரெட்டும் பாரே.

2. பாரு நீ வெள்ளறுகு சித்திர மூலப் பட்டான நிலக் குமுந தங்கக் குப்பி
அருமை மலை வேம்பு செக்கு பூண்டு அன்பான புவரசு பட்டையிலே பருப்புக்
கூறினேன் காய் பூவு மஞ்சதாகும் கூறுன் பூவரசு பலம் பத்தாகும்
வாரு நீ பிடித்ததின் பின் முடாவில் போட்டு லக்கூராக ஊறு சக்கிலக்கி வுள்ளிமொல்
றே.

முன்றுன பயகூட வழுரி நீரு உத்தமனே ரெண்டு வள்ளமுடாவில் விட்டு
பன்னன மூன்று நாளுற விட்டுப் பரிவாகப் பிசைந்து வடிகட்டிக் கொண்டு----
கன்ன யெண்ணை படி ரெண்டதாகும் சுருள்ள சாறுப்படி ரெண்டதாகும்
முன்றுன மிளகு சுக்கு வெள்ளைப் பூண்டு உத்தமனே பறங்கிப் பட்டை காணே.

4. நாமென்ற வகைக்கு நிறை மூன்றதாகும் சாதகமாய்ப் பொடியிட்டு மெழுகுபதமாக்கி
ஆமென்ற நம்றம் உறிம் உங்கன் சிங்கும் நமசிவயாவே அப்பனே சிரு நீக்கில் பதினெட்
டுக் தான் செய்த

கோமென்ற உருவேறச் சித்தியாகும் கருக என்னை நனில் போட்டாயானால்
வரமென்ற யெண்ணையுட சாபம் நீங்கும் மைந்தனே கால் சிறக்கை உள்க் கொள்ளாமே

5. கொள்ளவே சிரந்தி பட்டம் குலைப் புண்கள் கருணை வெட்டை முதல் மேகமெல்லாம்
தள்ளவே அரையாப்பு பிறமியங்கள் சாதகமாய் ரசக் கட்டு யெல்லாம் போகும்
வெள்ளவே யெண்ணையடா மூன்று நாளும் வெள்ளிக் கிசாமாய்க் கட்ட வேணும்
உள்ளபடி சொன்னடை மறுபத்தியம் மூன்றாகு முத்தமனே யெள் கால் தண்ணீர் வாரே

6. வாரப்பா பின்மொழு முட்சமாக மைந்தனே கருக்கத்தில் யெண்ணை சொல்வேன்
சேரப்பா புவரசு சமூலத் தாரம் திறமான காராட்டு அமுரியிலிறப் போட்டு
சாரப்பா புளிக்க தாரும படியாகச் சாதகமாய் வெள்ளருகுச் சாறு நாளி
வாரப்பா களச்சிச் சார் நாழியாமம் மைந்தனே முப்பிச் சார் படி யரைதான்
சேரே.

7. சாறுன மிளகு சுக்கு வெள்ளைப் பூண்டு சாதகமாய் வகைக்கு ய பலம் மூன்றும்
கூறுன பறங்கிப் பட்டை காசிடை தான் பக்கு குருகப் பொடி பண்ணி யெண்ணை படி
வீறுன மெழுகு பதமொரு விறகில் காதலம் விபரமாய் நாளொன்று கால்படி தான்
கொள்ள

வீறுன முறை நான் சொன்டாயானால் லெகு சுக்கம் காயிலத்தில் சுக்கு தானே.

8. தானுன யிதருக்கு சித்தியாக சாக்கமாய் சிவாய நம அங்கிறம் உறீம் சியென்று
கோனுன விநாயகனைப் பூசை பண்ணி குருவென்று யென்னை கூனை வைத்துக் கொண்டு
வீனை வீணுக்கு முடாதே விருவாய் போகுமென்று யென்றுரு நாகன் சொன்னான்
தானுன மேகத்தில் பிறந்த ரோகம் சகாரு யென்னையிலே தீரு முற்றே.

<u>சயஞ்லாந்தகன்:-</u>

1. பாடுகிறேன் சிலேற்பனந் தான் கொண்ணைத்தாரம் பற்றுக்கச் சயகுனந் தகனைக்
கேடு

போடுகிறேன் கட்சியிலே மைந்தா யின்வம் புகழுகிறேன் கடுங் சுக்குப் புகழ்ந்த
காறுவ

நாடுகிறேன் அரிதாரம் பலமதொன்று நலமான சலர்சத்துப் பலமதொன்று
நீடுகிறேன் செம்பருத்திச் சாத்தால் நீயும் நேராக மூன்று நாளாட்டி வாங்கே.

2. சாக்கி-கெளக்கு-அத்--சாக்கியே--
வாங்கி யிதைக் குகையிலிட்டு மண்ணுஞ் செய்து மன் கனக்க சிறு தாளி கொண்டு வந்து
வாங்கியே தமரிட்டு மணலைக் கொட்டி மைந்தனே மணல் மேலே குகையை வைத்து
வாங்கியே மணல் கொட்டிச் சட்டி மூடி வாகாக அடுப்பிலே வைத்து நன்றாய்
வாங்கியே மெழுகு நரம் தீப வன்னி மாட்டி நீ யாற விட்டு யிறக்கிப் பாரே.

3. பார்க்கையிலே தேவிக்குப் பூசை செய்து பளர் பழனிலிங்கிர கோபம் போலாகும்
சேர்க்கையிலே பணவிடை தான் விட தாறுக---சாக்கில் செழுக்கிருக்கால்
சயகாசந் தீரு தீரும் வார்க்கையிலே கோடைச் சார்க்குள்ளே யூட்ட மகத்தான
உள் மாங்கை

-:
யெட்டுந் தீரும்

தீர்த்திடவே சிலேற்பன வாதமானால் தென்னமட்டைச் சாத்தி பிறந்து போமே.

4. போமப்பா காயகலாச மாறுல் பொரி கடுக்காய்த் தா லிவிரு பொடியாய்ப்
போகும்

சேமப்பா காச சுயம் போக வெல்லம் வெல்லமுடன் தேன் கட்டிக் கொடுக்க வா

ஓமப்பா சுபகாசம் தனக்கு நீ கேள் அருமையுடன் கரிசாலைச் சாத்திரட்டு
சாமப்பர விலற்றிலே கொன்றை ததாரா சயங்களெல்லா மொழிந்து போம் சாற்றக் கேளே.

5. சாற்றக் கேள் வாந்தி விக்கல் போக வெள்ளல் தயவாக வெண்ணெயிலே குளப்பி மூட்டு
சாத்துகிறேன் செங்கள நீர்ச் சாத்திரட்ட சர்வ சுரம் வீழ்ந்து போம் சத்திய மாகும்
சாத்துகிறேன் குறுத்துக் குர்நமாகச் சார்வான சீலைக்குப் பிறம்புமாக
சாத்துகிறே னிப்படிக் காவிருந்த பேர்க்கு சகல சித்த மாடலே தாய் சொல்வாளே.

6. (வேறு) சிந்தாமணிப் பல திரட்டு: இதன் முன் நாடி லெட்சணம் கூறப்படுகின்றதை விடுத்து மருந்து முறை மட்டும் எழுதப்படுகிறது.

பீனிசத்துக்கெண்ணை:-

குருந்தொட்டி நன்னாரி சிற்காஞ்சொறி, பொன்னாங்கண்ணி, சிறுகீரை, நொச்சி சித்தாமுட்டி ஆக வகைக்கு சாறு படி ௨. கருஞ்சீரகம், சீரகம், தேவதாரம், யேலம் மிளகு, லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, தேன் மெழுகு, சாதிக்காய், சாதி பத்திரி ஆக வகைக்கு விராகனிடை.௧, பாலிலரைத்துக் கொண்டு முன் சொன்ன பச்சிலை சாறு வகையும் யெண்ணை படி.௧, இது வெல்லாங் கூட்டி கலந்து அடுப்பேத்திப் பதத்தில் வடித்துக் கொள்ளவும். பீனிசம் இந்த எண்ணை முழுகத் தீரும்.

சுரத்துக்கு:-

ரசம், கெந்தகம், பச்சைக் கற்பூரம், லிங்கம், சாதிக்காய் இது சமன் பொடி செய்து சுத்தி செய்த நேர்வாளம் இரண்டு பங்கு இது வெல்லாங் கற்றாளம் பால் விட்டரைத்து உழுந்துப் பிரமாணம் உருண்டை செய்து சரீர பலமறிந்து ஒரு உருண்டை சர்க்கரையிலிட வெட்டு வகைச் சுரமும் மூன்றே முக்கால் நாழிகையில் நிற்கும். இச்சா பத்தியம்.

சுரத்தின் மேல் கழிச்சலுக்கு:-

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, யேலம், லவங்கப் பட்டை, சுக்கு, காசுக்கட்டி, அதிவிடயம், யிந்துப்பு, வெப்பாலையரிசி, ஓமம், சீரகம், திப்பிலி, வகைக்கு விராகனிடை.௨, இது வெல்லாம் இடித்து வஸ்திர காயஞ் செய்து வெருகடிப் பிரமாணம் தயிர் தண்ணீராகுதல் மோரிலாகுதல் கொடுக்க நிற்கும். இதுக்கு ராத்திரிக்குக் கொடுக்க கசாயம் நல்லிக் கொழுந்து விளாங்கொழுந்து, விழுதிக் கொழுந்து வில்லக் கொழுந்து, மாதளங் கொழுந்து வாழைப்பூ, வகைக்கு ஒரு பிடி கோரைக் கிழங்கு, வில்வவேர், விடத்தலை வேர் இது வெல்லாம் கசாயம் செய்து இரு நாழி நீர் மெட்டொன்றாய்க் காய்ச்சி முன் சொன்ன பொடியும் மேல் போட்டுக் கொடுக்கக் காபசுரம் உழைச்சல் நிற்கும்.

குன்மவலிக்கு மருந்து:-

கச்ச நார்த்தங்காய் ஒவ்வொன்று நாலாய்க் கீறி உப்பு இரண்டுபடி எலுமிச்சங் காயளவு நிலவாகை வேர் முப்புர மெரித்தான் வேர் அவ்வளவு சித்திரமூலம் இந்த மூன்று வகையும் அரைத்து இரண்டு படி தண்ணீரும் உப்பு நார்த்தங்காயுடனே போட்டு ஓமம், சீரகம் வகைக்கு படி.1/16, கருஞ்சீரகம் படி.1/16, இது வெல்லாங் கூடப் போட்டுச் சட்டி வாய் வைத்து ஆழாக்கு நல்லெண்ணை விட்டுத் தாளித்துக் கொண்டு சீலை கொண்டு வேடு கட்டிப் பதனம் பண்ணி யேழு நாள் செல்ல விட்டு அந்தத் தீர்த்தில் தினம் பாதிக் கீற்று அந்தத் தண்ணீரிலே சிறங்கை குடிக்க யிப்படிப் பதினைந்து நாள் திரு வரவும். வலி குன்மம், வாய்வு தீரும்.

இலிக் கண்ணுக்கு:-

திருகு கள்ளிப் பால் சீலையிலே ட்டி நிழலுலர்த்திச் சுட்டுப் பொடி செய்து எருமை வெண்ணெயில் சாத்திக் கண்ணிலிடவும். இலி கண் புருக்கடியுந் தீரும்.

இருமலுக்கு:-

கையாந்தகரை, நாயுருவி, கருங்காலி மஞ்சு நா துவளை
மெய்யா நிறைத்த யெருக்க மொட்டு தேலிப் பருத்தி யிலை யேழும்
நெய்யாத் தெளிந்த வெண்ணெயிட்டு நேரா யரைத்து வடையாக்கி
கையாலெடுத்துத் திப்பிராய்ச் சுணைத்து வேண்டாங் கண்டீரே.

நெருஞ்சியிலை எலுமிச்சங் காயளவு அரைத்து நல்லெண்ணெயில் வேக வைத்து நசியம் பண்ணவும்.

காமாலை சோகை பாண்டு மகோதரத்துக்கு:-

சத்தி சாரம், நமச்சாரம், வெங்காரம், கல்லுப்பு, வளையலுப்பு, இந்துப்பு வகைக்கு விராகனிடை.௧, சிலகைப் பொடி வகைக்கு களஞ்சு மூன்று கூட்டி இடித்து வெருகடிப் பிரமாணம் உருண்டை இள வெந்நீரில் கொடுக்க சோகை, காமாலை, பாண்டு, மகோதரம், ஒட்டுக் காச்சல், உள்மாந்தை, உப்பிசம் இது வெல்லாந் தீரும்.

கண்ணோவுக்கு மண்டை பிடிக்கு எண்ணை:-

கையாந்தகரை, கற்றாளை, சீந்திற் றண்டு, கொத்திலைத் தண்டு, குருந் கொட்டி சவுரிக் கொத்து, வெள்ளருகு கற்பூர வள்ளி கொத்திலை, தாழை விழுது, எலுமிச்சம் பழம் இது வகைக்கு சாறு படி.௨, எண்ணை படி.௨, பசுவின் பால் படி.௨, அறுகம், திரிபாலை, யேலம், லவங்கம், சென்பகமொட்டு, விலாமிச்சம், அதி மதுரம், கோஷ்டம், தக்கோலம், சாதிக்காய், கிராம்பு, மலைமஞ்சள்,

தேவதாரம், அரத்தை, சதகுப்பை, செவ்வள்ளி, சீரகம், அகில், வாலுளுவை அரிசி வாய்விளங்கம் வகைக்கு பலம்.க, இது வெல்லா மரைத்து எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி பதத்திலிறக்கி கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி மண்டைக் கரப்பான், மண்டை யிடி, பித்த நோவு, செவிநோவு, புருவ நோய், கண்நோய், கண்டத்துக்கு மேல் பட்ட வியாதி யெல்லாந் தீரும். இது கை கண்டது.

<u>நவலோக மித்திரம் செய்யும்படிக்கு விபரம்</u>:.-

தங்கஞ் செய்யும் காரஞ் சீயம் வெள்ளிக் காந்தம்
தங்க மிருப்புக் குக்காரம் பொன்று வங்கத்தைக் தாரமும கொல்லும்
வரிசிலைக்கு நாகமதாந் தோழமே கெந்திக்கு செம்பு.

<u>அப்பிரக செந்தூரம்</u>:-

அப்பிரகந் தானெடுத்துப் பொடியதாக்கி அத்திப் பால ரசம் பட்டைச் சார் விட்டு செப்பமுடனரைத்து மெழுகு மெழுக்கிலை பொதிந்து சேர்ந்த சட்டி தனிலடக்கிச் சீலை செய்து தக்க புடம் வைத்து எடுத்து அந்தச் சாற்றில் தக்கதரைத்துப் பத்துப்புடம் அதுவே வைத்து மிக்க தொரு யீஸ்பரனைப் பூசை செய்து உகந்த ரோகத்துக் கேத்த பண்விடை தேனில் கொள்ளே.

<u>மேரு பிரத்தாண்ட மாத்தாண்ட வரசன்</u>:-

நாவி, சாதிலிங்கம், கெந்தகம், வெங்காரம், திரிகடுகு இது வெல்லாஞ் சமன் கொண்டு யிஞ்சிச் சாத்திலாகுதல் முருங்கைப் பட்டைச் சாத்திலாகுதல் ஏழு தினம் நாலு சாமம் மத்தித்து குன்றி யளவு உருண்டை செய்து நிழலுலர்த்தி கிராம்பு கசாயத்தி லாகுதல் இஞ்சிச் சாறாகுதல் ஒரு உருண்டை யிட சருவ சுரமுந் தீரும்.

<u>வாதசூலைக்கு</u>:-

பறங்கிப் பட்டை பலம்.30 சுத்தி வகை திருகுகள்ளி, கொண்டு வந்து நறுக்கிப் பானையில் போட்டுக் குழுனி தண்ணீர் விட்டு சீலை வேடு கட்டி அதின் மேல் பறங்கிப் பட்டைச் சூரணத்தை வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து ராப் பகல் அறுபது நாழிகை யெரித்து புட்டு வெந்த பதத்திலிறக்கவும். இதுக்கு கெந்தகம் சுத்தி பசுவின் பாலொரு படி சட்டியில் வார்த்து அதின் மேல் சீலை வேடு கட்டி அதின் மேல் கெந்தகம் பலம்.3, வைத்து சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து இரண்டு நாழிகை எரிக்க அந்த வெட்டு மேல் வெள்ளையா யிருக்கும். அதை எடுத்துப் பொடி செய்து முன் சூரணத்தில் கலந்து பதினைந்து நாள் கொள்ளவும். வாத சூலை தீரும். இதை ஒரு மண்டலங் கொண்டால் சகல வியாதியுந் தீரும். மூன்று நாள் கைப்பு, புளிப்பு தவிர்த்து நாலா நாள் மருபத்தியம். துவரைப் பருப்பு, பாசிப் பருப்பு, உப்பு வறுத்து கூட்டவும். ஒட்டுப் புண், கடி விடம், பதினெட்டுந் தீரும்.

<u>சுரத்துக்கு மேக நாத ரசம்</u>:-

சாதிலிங்கம், வெங்காரம், ரசம், கெந்தகம், நேர்வாளம் இது சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் இரண்டு சாமம் அரைத்துக் குன்றி மணிப் பிரமாணம் நிழலுலர்த்தி உருண்டை செய்து ஒரு உருண்டை திரிகடுகு சூரணத்திலிட சகல சுரமுந் தீரும். பத்தியம் தயிரும் சோறும் போடவும்.

<u>சவுபாக்கிய சுண்டி</u>:-

ஏலம். பலம்.2, தக்கரை விரை, கிராம்பு, லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, திப்பிலி, தேவதாரம், திப்பிலி மூலம், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், தாளிசை பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், சித்தேலம், அமுக்கிலாங் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, பொன்னுங்காணி வேர், யெலந்தைப் பருப்பு, பூனைக்காலி விரை, சுக்கு, பருத்தி விரை சடாமாஞ்சி, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், மினி நெருஞ்சி வேர், மிலவம் பிசி,ன ஆவிரை விரை, வங்க பற்பம் இது வெல்லாம் சமன் கொண்டு தேன் விட்டு மத்தித்து நேரமொன்றுக்கு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி நஷ்ட யிந்திரியம், கை காலோய்வு, மேகிளைப்பு, மேல்ச் சுவாசம், தாகசாந்தி, பெருவயறு, மேக சலக் கழிச்சல், நீரெரிவு, வெள்ளை விழுகிறது திவவு, சிரங்கு, கிருமி, பித்த கூடியம், மார் யெரிவு, உள்ளங்கா , உள்ளங் கை எரிவு, உடம்பு வலி, கிரந்தி, சொரி, கிருணி, பித்தத் தலைவலி, தலை சுழத்த விழுமல் இது வெல்லாந் தீரும்.

<u>பல்லாதி லேகியம்</u>:-

செருங்கொட்டை பலம்.100, பதக்குத் தண்ணீரிலே போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி அதில் சுக்கு, திப்பிலி, ஓமம், சீரகம், பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி இவை யொன்றுக்கு பலம்.க, மிளகு, திப்பிலி மூலம், ஆனைத் திப்பிலி, மடப்பாலை, பட்டை, செவியம, பஞ்ச லவணம், சீனக்காரம், சவுக்காரம் ஒவ்வொன்று பலம்.க, இது வெல்லா மிடித்துச் சூரணம் செய்து தயிர்த் தண்ணீர் நாழி, காடி நாழி, மோர் நாழி, இஞ்சிச் சார் நாழி முன் பொடி சூரணத்தைப் போட்டு, நெய் நாழி விட்டுக் கிண்டி இறக்கிக் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி கிருணி, மூலம், பீலிகை, கிரந்தி, உப்பிசம், கண்டமாலை, சிலேற்பன ரோகம், வயத்து வலி இது வெல்லாந் தீரும். சூரியன் கண்ட பனி போலே போம்.

<u>அசன் வல்லாதி லேகியம்</u>:-

வில்வவேர், நெல்லிப்பருப்பு, குளக்குறண்டி; வகைக்கு பலம்.15, கண்டங்கத் திரி வேர், சங்கம் வேர் இது வகைக்கு பலம்.5, நெல் பொரி படி.க, தண்ணீர் படி.3 இது வெல்லா மிடித்துப் போட்டு யெட்டுப் படியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு பனை

பலம்.30 கட்டிக் கொண்டு முன் கஷாயத்தில் போட்டு யிஞ்சிச் சாறு படி.க, நார்த்தம் பழச் சாறு படி.க, இது வெல்லாங் கூட விட்டு பாகு காய்ச்சி இதற்கு மேல் கற்கம், யேலம், லவங்கம், நாகப்பூ, கிராம்பு, அதிமதுரம், சிவதை, இந்துப்பு, சீரக மிளகு, திப்பிலி, சுக்கு, முந்திரிப்பழம், திப்பிலி மூலம், லவங்கப் பத்திரி, தாளிச பத்திரி இது வகைக்கு பலம்.க, இது வெல்லா மிடித்து வஸ்திர காயம் செய்து பாகில் போட்டு நெய் படி இரண்டு விட்டுக் கிளறிப் பதத்திலிறக்கி ஆற விட்டு ஒரு படி தேனும் கூட விட்டு லேகியம் நெல் புட மிட்டு வைத்துக் கொண்டு நெல்லிக்காயளவு இரண்டு நேரமும் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி காமாலை, புட்டுரோகம், சத்தி குன்மம், பாண்டு ரோகம், சீதசுரம், அஸ்தி சுரம், சுவாச காசம், மூர்ச்சை, குத்திருமல் நோவு, அரோசிகம், வாந்தி, சிரசு வாய்வு, வயத்தில் சோம்பலிது வெல்லாந் தீரும். கை கண்டது.

<u>நீர்க் குன்றித் தயிலம்</u>:-

நொச்சி வேர் பலம்.100, ஆயில் பட்டை பலம்.100, முள்ளி வேர், கண்டங்கத்திரி, பிறண்டை வேர், சாறணை வேர், ஆடாதோடை சிறுகாஞ்சொறி, கையாந்தகரை, மணத்தக்காளி, குட்டான் காந்தை, குன்றி மணி வேர் இது வகைக்கு பலம்.25 நொறுங்க யிடித்து ஒரு முடாவிலிட்டு யிருநாழி தண்ணீர் வார்த்து வெட்டொன்றாய் வடித்து பசுவின் பால் வள்ளம்.உ, நல்லெண்ணை படி.உ, வேப்பெண்ணை படி.உ, புங்கம் பட்டைச் சார், ஊச்சியிலைச் சார், நொச்சி சாறு, கருநொச்சி சாறு, கோசல கோமியம் வகைக்கு படி.½ இது வெல்லாங் கூட்டி ஒரு மிடாவிலிட்டு இதற்கு மேல் கற்கம் திரிகடுகு, திரிபாலை, மரமஞ்சள், பூலாங்கிழங்கு, கோஉட்டம் சித்திரமூலம், செவியம், திப்பிலி மூலம், மஞ்சள், தாளிசபத்திரி, கருஞ்சீரகம், சீரகம், காட்டுச் சீரகம் வகைக்கு பலம்.உ, இடித்து வஸ்திர காயம் செய்து அந்தத் தயிலம் பக்குவம் பார்த்து சி மிருதுவான பதத்தில் வடித்து யெட்டு நாள் தானிய புடம் வைத்து யெடுத்து உள்ளுக்குக் கொடுக்க நசியும் பண்ண லேபனம் பண்ண யெட்டு நாள் தலைக்கிட்டு முழுக இப்படி மூன்று மாசம் முழுகவும். இதுக்கு தீரும் வியாதி பீனிசம், சுவாசயிருமல், தலைநோவு, காது மந்தம், நேத்திர வாய்வு, அற்புத வாய்வு, திருகு சன்னி, பாரிச வாதம், கை கால் தருவர் வாதம், உப்பிசம், வாதருலை குதக வாய்வு, அசாத்தியம் யிசித்துக் கொள்ளுகிற வாதம் உள்ளங் கை, உள்ளங் கால், கழுத்து, நரம்பு யெறிகிற வாதம், ஊசி குத்து மாப் போலே குத்துகிறது நாசிகா சன்னி இது முதலான கண்டத்துக்கு மேல் பட்ட வியாதி யெல்லாந் தீரும். கை கண்டது.

<u>பஞ்ச ரசம்</u>:-

பஞ்ச ரசம் செய்வதற்கு மருந்தைக் கேளு பரம ரசம், நாவி, கெந்தி, சமலுய்க் கூட்டி யிஞ்சி கடல் சாதிக்காய், விராகன் ஆறு, மீறுகின்ற திப்பிலி விராகன் ஆறு, கொஞ்சுகின்ற பெருமரஞ் சார் விட்டரைத்து கொண்ட பச்சைப் பயறளவு குளிகை செய்து கொஞ்சு நின்ற அஸ்தி சுரம் மற்ற தெல்லாம் அய்ய வெல்லந் தனில் கொடுக்கத் தூரம் போமே.
துலங்குகின்ற பத்தியத்தைச் துய்ய பசுவின் தயிர் வெள்ளாட்டுத் தயிர்.
யிலங்குகின்ற சென் நெல் சோற்றில் கொள்ள யியல்பா முள் சுரந் தீர்ந்து யிருப்பார் தாமே.

<u>நார்த்தங்காய் லேகியம்</u>:-

நாற்த்தம் பழச் சாறு படி.௪, சித்தாமணக்குச் சாறு படி.க, வெள்ளாட்டுக் கோமியம் படி.க, கல்லுப்பு படி.க, வெள்ளை வெங்காயப் பருப்பு படி.க, உப்பும், வெள் வெங்காயப் பருப்பு மரைத்து அந்தச் சாற்றில் கரைத்து லேகியம் பதமாகக் காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு நேரமொன்றுக்கு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பீலிகை, யுன்னீர்க் சோர்வை, பிறளிக் சோர்வை, மகோதரம் யெட்டு வகைக் குன்மம், வாதம் வயற்று வலி, சோகை, பாண்டு இது வெல்லாந் தீரும்.

<u>விளிவித்த தயிலம்</u>:-

1. போச்சப்பா விளிவி யெண்ணை வைக்கக் கேளு புகழான யேரண்டத் தெண்ணை படி யொன்று
வாச்சப்பா நறு நெய்யோ படி தானென்று வாசமாம் விளிவிச் சாறு படி தான் ரெண்டு
கூச்சப்பா வசம்பீருள்ளி கோஉட்ட மிலவங்கம் மஞ்சள் சாதிக்காய் கிராம்பு யேலம்
காச்சப்பா வகைக்குக் கால் பலமதாய் கட்டாகப் பதத்தில் வெந்து வடித்துக் கொள்ளே.
2. கொள்ளவே சேற்ப வாய்வும் நாடி சொடிய சுத்தி கிறிமி யொடு குளிர்ச்சி சுடு
கள்ளமாம் சதை மூடல் யெய்களைந்தும் காசுமுலாடி விடும் கருவே தாகும்
பள்ளமாங் குளி விழுந்து கிடங்கு நேராம் பங்கயமாம் மலர் பூத்து அமுர்தம் அமுர்தம் வீசும்
உள்ளே தானியிர் கோண நிமிரு நேராய் உறுதியாய் பிர்ளை யுண்டாய் வயசு நூறே.

<u>வேறு நூல்: அகஸ்தியர் பாடல் வைத்தியம் ஐம்பது</u>:-

1. வாதமே----தாகு வருகின்ற பக்க வாதம் சீதமே கெடு வாதம் சிறந்தடல் முடக்கு வாதம்
குதரச் சந்து வாதம் குதித்திடும் மருந்து கேளே.
2. மருந்து தான் சித்திர மூலம் வளரு மாவிலிங்கக் கொட்டை
திருந்திடும் முருங்கை சங்கு சேர வெள்ளறு வேம்பு
பொருந்திய யெருக்குச் சுக்கு புகழுந் திப்பிலியுங் கொள்ளே.

3. கொள்ளப் பின்னெண்ணை அய்ந்து குலவுதில்லைப் பாலறக
மெள்ளவே முருங்கை வாதை மேவு மாவிலிங்க மூலம்
கள்ளவியே காயமிந் தன்றும் வெள்ளுள்ளி வசம்பு
உள்ளிதை யெரித்துப் பின்னை உடம்பிலே புனைந் செய்வாயே.

4. செய்வர்ய் தார நற்பதர்க செனித்தது பித்தங் கேளாய்
அய்யமாஞ் சித்துப் பிறமை அறிவது பித்றமும் பிறமை
நய்யுடல் நடுக்கம் வாந்தி நாலது சலத்தல் வாய்நீர்
தய்யவே யிதற் கெல்லாந் தான் சுற்றிடுமருந்து கேளே.

5. சாற்றிய மருந்து கோஉட்டம் தருந் திரிகடுகு மூலம்
போற்றிய மாஞ்சி பூரஞ் சந்த---ம்
மாற்று தாளிசை லாமிச்சு மருவு---மேலும்
பாற்று சர்க்கரையுங் கூட்டிப் பரிந்து மண்டலந்தான் கொள்ளே.

6. பரிந்து நல்லெண்ணை பாலும் பரிந்த நெல்லிக்காய்ச் சாறும்
தெரிந்திடு மொசுமொசுக்கை சீந்திலும் பொன்னாங்காணி
வருந்த சந்தணமு முத்தம் மதுரமும் மேலமாஞ்சில்
பொருந்த செண்பகம். லவங்கம் புண்டெரி தலைக்கு வாரே.

7. வார் பொருதனைத்த அய்யம் வளர்ந்திடு மிருபதாகும்
சீருளமாந்தை யீளை தீகாடி விக்கல் சத்தி
பேர் பெரு சுவாச காசம் பலத்திடு மிருமல் கோளை
தார் பொடு சுரமு மாமம் தளைக்கது மருந்து கேளே.

8. தானது நல்லிஞ்சிச் சாறுந் தான் திரிகடு கோடேலம்
மாந்தரு கோஉட்ட மாஞ்சி வாலுளு வரிசி சிங்கி
கான் சிறு நாகங் கண்டங் கத்திரி யரத்தை யிந்து
நிலவும் நொச்சியின் கசாய நெய் யெரித்துள்க் கொள்ளே.

9. எரித்து நல்லெண்ணை பாலும் மிசைந்த லாமிச்சை வேலி
தரித்திடு சீந்தி முத்தஞ் சந்தணம் தேவதாரம் முறித்திடுந்
தண்ணீர் விட்டா லுயர் நிலப்பனை நன்னாரி
பரித்திடு மஞ்சளுத்தி பகர். தலை தனக்கு வாரே.

10. தனக்குரு ரெத்த மூலம் கான் முளை மூலம் சீயும்
சிலைக்குரு முளையா மூலம் சீமூலம் குறைந்த மூலம்
மனக்குரு வாத பித்தம் மய்யமும் மூலத்தோடு
தனக் கொரு மருந்து செய்ய கன்னியே கேட்டிடாயே.

11. கன்னியுஞ் சாறு முத்தங் கறனையும் மெருக்கு சுக்கு
மன்னிய சித்திர மூலம் முள் ளிலங்கொடு கடுக்காய்
புன்னிய பிறண்டை கொன்றை பத்ற புலி நடலை காட்டி
துன்னிய கறனைப் பாலில் சூரணஞ் செய்து கொள்ளே.

12. செய்திடும் வாத பித்தம் சேற்றுமக் கிறுணி மூலம்
கொய்திடுங் கிறுணி வாய்வு கூடிய கிறுணி பின்னை
நய்ந்திடுஞ் சலக் கிறுணி நாட்டிடுஞ் சீக் கிறுணி
மெய்திடுங் கிறுணிக் கெல்லா மினியது மருந்து கேளே.

13. இனிய தோரு டும்பு காய மிந்துப்பு. வளையலுப்பு
கனிய வெள்ளுள்ளி சுக்கு கனிய. திப்பிலி மானீசந்.
தனிய சவுட்டு மண்ணும். தளிர் சித்திர மூலமோமம்
பனியது பிரமிச் சாத்தில் பண்ணியே பொடித்துக் கொள்ளே.

14. பண்ணிய வாத. பித்தம் பகரிய குன்ம மெல்லாம்
நண்ணிய சத்தி குன்மம் நலங்கிடும் வாய்நீர் குன்மம்
கன்னியே யெறிக்குங் குன்மம் கனத்தடல் பிறட்டுங் குன்மம்
கன்னியே வலிக்குங், குன்மம் கூறுகிறேன் மருந்து கேளே.

15. கூறிய நாவி குதங் கொடிய வெங்காரந் தாரம்
தேறிய யிரு விலங்கந் திகழ் மனோசிலையுந் தாரம்
காரிய கெந்தகந்தான் கலா திரிகடுகு கூட்டி
ஆரியபொடி. தான் பண்ணியதனில் தேனருந்து வாயே.

16. அருந்திய வாத. பித்த மய்ய மோடிபதாகும்
வருந்திய வாத நாளு வளர் சல பித்த மாற
பொருந்திய சிலேற்பனம் பத்து பூனை நீரிணக்கை ஓடுந்
திருந்திய மேக ரோகந் தீர அம் மருந்து கேளே.

17. ஆமது மருந்தாவாரை. அலைகடல் ராஞ்சி தொன்னிற
தாமது மருந்த நல்ல தருங் கோட்டான் சரந்தை பூலா வாமிது யிலந்தை
காட்டு மல்லிகை நல் விளாவும்
போமது அசிக் காந்தம் புகழ் மதுரந் தான் கூட்டே.

18. மதுரம் சந்தனம். கிராம்பு மகிழ் பச்சை மகரப் பூவும்
சதிர் பெரும் லவங்கம் யேலம் தாளிசை மூர்ஞ்சில் மஞ்சள்
சதிரிலா மிச்சை சீந்தி கடு முத்தம் வேலி சட்ட
மெதிரில்லா. யெண்ணை பாலும் யெரித்து நீ முழுகிடாயே.

19. யெரித்திடும் ரெத்த மேகம் மிடசிய மேகந் தன்டு
மரித்திடு மேகம் புண்ணாய் வளர்ந்திடுங் கிறிச்சி பாலை
தரித்திடுந் துள்ளி மேகம் சலக் கட்டு மேகந் தங்கள்
விரித்திடு மேகம் போக விளம்புவேன் மருந்து தானே:

20. விளம்பக் கேள் பறங்கிப் பட்டை மேவிடு கெந்தகமுஞ் சாதிக்காய்
களம்புகு கிராம்பு நாகங் கற்பூரஞ் சாதிபத்திரி
தலம்புகு மசுவ கெந்தி தரு கொடி வேலி மாஞ்சி
விளம்பு சற்கரை நெய் கூட்டி யிதமுடனுள்ளுக் கொள்ளே.

21. யிதமுறு வாத பித்த மிலங்கு சேற்றுமக் காமாலை
பதமுறு வறக் காமாலை பாண்டு வீங்கிய காமாலை
நிதமொடு வாத பித்தம் நீர்க் காமாலை யய்யந்
திதமொடு பித்தத் தோடு சேர்ந்த காமாலை போமே.

22. சேர்ந்த காமாலைக் கெல்லாம் ரெளிந்தரப் பொடியுங் கூட்டி
சார்ந்திடுங் கடுக்காய் நெல்லி தான்றி சீரக மிரண்டும்
போந்த வெள்ளுள்ளி காந்தம் பொடியொடு கார மஞ்சும்
சாந்த திப்பிலி மாரீசந் தானது பகஞ் சாதிப்பே.

23. பகமொடு குலைப் புண்கள் பகர்ந்திடுங் கடி விடங்களிக மொடு
பெருவியாதி யிசைந்திடுங் குஉட்ட ரோகம்
சதமுரு தேமல் மேனித் தடிப்புத் தான் மறைக்கால் வெண்ணை
நிதமொடு சொறி சிரங்கு நிகழ்த்திட மருந்து கேளே.

24. நிகழ்ந்த நீரெட்டி வித்து நேர் படு குகலிங்கம்
உகந்த கெந்தகமலாத காரமுந் துருசு துத்தம்
புகழ்ந்த நெய் வார்த்தரைத்து பொருந்த நாற்பது நாள் தின்ன
தகழ்ந்திடில் சாம்பிராணித் தயிலஞ் செய்துடம்பில் பூசே.

25. பூசிய கபால குலை பொங்கு பீனிசம் நீர்த் தும்மல்
நாசிகா பீட ரோகம் நாத்தமுந் தினவுங் குட்டம்
தேசிகன் காதில் சீயும் சேர்ந்திடுங் கபால வாய்வு காசியில்
தொந்த ரோகம் காய்ந்திட மருந்து கேளே.

26. காய்ந்த நற் சிவதைப் போளம் காட்டிலா மனக்கம் வேரும்
வாய்ந்த ரோகணி முருங்கை வளரு மாவுறி சின்னி
பாய்ந்திடுங் களச்சி கொன்றை பசும் வேலிப் பருத்தி
தோய்ந்த யேரண்ட யெண்ணை சேர்க்தெரித் துள்ளே கொள்ளே.

27. சேர்ந்திடு மிவத்த ரோவி செய்ய நெஞ்செரி கால் குன்ற
பாய்ந்திடு முளத்தால் வாய்வு பயித்திய வாய்வு மேகஞ்
சாய்ந்திடும் வாய்வு மெய்யில் சருவாங்க வாய்வு மூல
மேய்ந்திடும் வாய்வுக் கெல்லா மிசைந்திட மருந்து கேளே.

28. கசய்த்த—தத்சிலைக <u>வாய்வுக்கு மருந்து</u>:-

இசைந்த சீரக மிரண்டு மியல் திரிகடுகு மூலம் மசைத்
மசைந்த நற் சித்திர மூலம் மாந்திரி பாலை. யிந்து.
யிசைந்த ரோகிணியுந் தேனிற் கலந்து கொள் ரோகம் போமே

29. கலந்திடு மிரத்தம் வாந்தி காய்ந்திடும் ரெத்த காசம்.
புலந்திடும் ரெத்த பித்தம் பொங்கு சீய்க் காசமோடு
மலந்திடும் பெரும்பா டொக்க வளரெழும்புருக்கி.
மார்பில் நலந்திடும் புண்ணும் போக நாரியே மருந்து கேளே.

30. <u>பித்தத்துக்கு</u>:-

நாரியே கண்ணீர் விட்டாள் நல்லத்தி அரசால் வித்து
பாரினில் பனையுஞ் சீந்தி பகர் முத்தஞ் சாதிக்காயும்
சீரிய கிராம்பு பத்திரி திரவியம் மஞ்ச கூட்டு
கூரிய நெய்யில் பண்ணிக் கொடுத்திட ரோகம் போமே.

31. கொடுத்திடு சுரத்துக் கெல்லாம் கூறிலாயிச்சஞ் சீந்தி
லெடுந்த காஞ்சொறியு முத்தம் மிசைந்த பற்படாக மூட்டி
மடுத்திடும் வேம்பு கோஉட்டம் லவங் கண்டங் காலி தேக்கு
தடுத்த திப்பிலியுஞ் சுக்கு தன்னுடன் தெசாவரங் கொள்ளே.

32. <u>சன்னிக்கு</u>:-

தன்னுடன் சன்னிக் கெல்லாம் தாங்கிய முசுறு முட்டை
பூருகந் தாள் வறுக்க புண்ணைப் புல்லூரி டைட்டிடு
சன்னி திப்பிலி முலைப்பால் தொக்க கதிப் பதிஞ்சிச் சாறும்
பண்ணும் கொடுக்க செந்தூரம் பாவித்தால் சன்னி போமே.

<u>சன்னி வலிப்புக்கு</u>:-

33. சன்னி போ மிளவி நாவி தனிச் சூதம் கெந்தகந் தான்
கன்னியே காரங் சாந்தும் கதிர்க பொன் காரம் வாளம்
முன்னிய சீலை கிராம்பு கறிய மிளகு சுக்கு
வெண்ணை திப்பிலி யிஞ்சிச் சாரிசு சூரணம் சன்னி போமே.

34. யிதமொடு முயல் கண்ட மிசைந்திடுங் குமர கண்டன்
மதமொடுங் குதிரை மேவும் வலிப்புடன் பல் வலிப்பும்
பதமுறு மவுரிச் சாறும் பகர் வசம்புள்ளி கூட்டி
முறை நசியந் தான் பண்ணி மோந்திடி லோடிப் போமே.

35. மோடிய சற்பத் தோலும் முள்ளியும் வசம்பு காரம்
நடிய கெவுரி நாவி நல்ல சுத்தங் காயம் போளம்
தேடிய மஞ்சள் மூலம் திறண்ட மாவிலிங்கி வாகை
கூடிய பெரு மருந்து சொல் சிறு குறிஞ்சான் கூட்டே.

36. <u>கரப்பானுக்கு</u>:- 8.4.64.
சொல்லிய யெருக்குப் புங்கு நலங்கிய முருங்கை வேரும்
மல்லிய சதிரக் கள்ளி மரமஞ்சள் நெருஞ்சியும் பார்
புல்லிய யெண்ணெ யஞ்சும் புகலுங் கக்கிடத் திணண்டம்
கல்லிய பதமதாக்கி கருத்திடம் பெருகும் பூசே.

37. கருத்துறப் படைக் கரப்பான் கருங் கொள்ளிக் கரப்பான் வீங்கி
வருத்திடுங் கரப்பான் பித்தம் வாத சேற்றும கரப்பான்
பொருந்திடுஞ் செங்கரப்பான் புறந் தோன்றிக் கரப்பான் தீரும்
தாந்தமாங் கருங் கரப்பான் தீர்ந்திட மருந்து கேளே.

38. தீர்ந்திடச் செங்கத்தாரி சேர் கரு நொச்சி கொத்தான்
சாய்ந்திடுங் களச்சி புங்கு சங்கொடு சங்கங் குப்பி
போந்த வேலிப் பருத்தி புகழ் செருப்படி தான் சின்னி
கூர்ந்த வெள்ளள்ளி சுக்கு கொடிய கொடிய வெள்ளறுகு கூட்டே.

39. கூட்டும் வெம்பாடம் பட்டை கறிவேன் சிவனார் வேம்பு
நீட்டிய சிவதை மூலம் நேரதை கண்டங் கத்திரி
போட்டது கடுக்காய் ரோணி பூதமாங் கரப்பான் பட்டை
வெட்டு சீரக மிரண்டும் விளக்கெண்ணெ யெரித்துக் கொள்ளே.

40. காய்ந்திடும் பெருமருந்து கண்டங்கத்திரியும் சுக்கு
சூழ்ந்திடுஞ் செங்கத்தாரி தோன்று சீரக மிரண்டும்
வாய்ந்திடுங் கடுகுரோணி வரு ரசம் மரத்தை கூட்டி
நிறைத்த சூரணத்தில் வைத்து நீங்கிட ரோகந்தானே.

41. <u>கவுசி</u>:-
நீங்கு கார்த்திகைக் கிழங்கு நிலக் குமிள் திசமூலந்தான்
பாங்குற மஞ்சள் மூன்று பகர் குப்ப மேனி ரோணி
தேங்கு சாறணை யெருக்கு திரள் கடுகு கொடிவேலி
பாங்கு நல்லெண்ணெ சீந்தி பருவமா யெரித்து மூழ்கே.

42. பருவமாங் கவுசியொடு பக்க விப்புருதி பிளவை
உருவமாம் பீலி மிக்க உதிரத்தில் சூலை யன்றி
கருவதை யளிக்குங் கெற்ப கடின விப்புருதி சாலம்
பெரு வயருடனே மந்தம் பெரு மகோதரமுந் தானே.

43. பொருத்த பேய்க் குமட்டிக்காய் பேசு வென் காக்கறண்டடான்
திருத்தமாம் லவண மஞ்சும் செய்திடுங் கார மஞ்சும்
வருத்த மாவிலிங்கங் கொன்றை வச்சிரத்தின் பால் மூலம்
கருத்துறு வசம்பு மஞ்சள் காய் மண்டலந்தான் கொள்ளே.

44. கொள்ளுமே விரு பாங்கள் கூறுவதனைகந் தீர
முள்ளி நாதளை நாரத்தை முசுமுசுக்கை கொண்டா நொச்சி
கள்ள விழ் பிரமி சின்னி களச்சி மாமலை நன்னாரி
தெள்ளிய கடுகு சுக்கு தேய்த்திடுங் குடிநீர் தானே.

<u>கண்டமாலை</u>:-

45. செய்யநோர் சேர்ந்ததோர் பவுத்திரங்கள்
வெய்ய விப்புருதி வீக்கம் விளங்கிடு அடையில் வாளை
புய்யவே பக்க சூலை பருமுதை பிளவையாது
துய்ய தாமரையாப் போடத் அடங்கிய மருந்து கேளே.

46. அடங்கிய யெருக்கு நீலி தோன்று கார்த்திகைக் கிழங்கு
அடங்கிய குன்றி யெட்டி வளர் பெரு மருந்து கஞ்சா
முடங்கிய வசம்பு காயம் முதிரும் வெள்ளுள்ளி கூட்டி
யடங்க வீக்கத்தில் பூச அடங்கிடா துடைந்தாற் கேளே.

47. உடைந்த வேப்பெண்ணெ யுள்ளி யோங்கு வெம்பாடந் துத்தம்
கூடைந்த கெந்தகமே சூதங் காசுக் கல் துருசு நாவி
விடைந்த குங்கிலிய மிருதார சிங்கிதார
மிடைந்ததில் தயிலம் வாங்கிலிலிங்க மாரோகம் போமே.

48. இந்தமா நீல காச மியம்புறும் பித்த காசம்
மந்தமாம் படலம் பில்ல மயிற்கந்து புழு வெட்டோடு
சந்திய மாலைக் கண்ணுறு தளிரிளி கண்ணுறு நேத்திரம்
வந்த வாய் விடி கண்ணுறுக்கு மருந்து தாமுறைப்பாய்ச் செய்யே.

49. <u>கண்ணோவுக்கு</u>:-

உரைத்திடு முத்து வெள்ளி உயர்ந்த தாம்பூரம் ரசம்
கொறைத்திடுந் தருசு தந்தம் மணி மண்டையோடு பொன்றும்
திரைத்திடும் பீதரோணி சேற்புக்கு நிம்பஞ் சாத்தால்
அரைத்திடுங் கண்ணில் தொன்றூ த்தாறமே யகன்று போமே.

50. போமத பொன்னுங்காணி சிறுகீரையோடு முத்த
மோமத சீந்தி நிம்ப முயலு நார்த்தை கோஉட்ட
மாமத மதுர மேலம் வளர் செண்பகம் லவங்கம்
நாமித சொன்னே மென்னே நாட்டினில் முழுகப் போமே.

போகர் வயித்தியம்: வெண்பா:-

1. ஆரியமாம் வாகடத்திரட் பொருளை ஆராய்ந்து சீரிய தோர் செந்தமிழுல் செப்பவே
கூரியதா யுள்ள நிதானமுஞ்சி குட்சை யோடும் திநர்யகனே வள்ளலே யென் மத்துள்
வா.

2. வாவெனவே சேற்றுமத்தில் வந்த் சிறுஞ்சிகளும் போவெனவே நாவிலிடப் போகுமே
பாவனையாய் வாகான பீனிசமு மத்த சீ யெனவே தீர ஆக்கிரணம் பண்ரத்தை.

3. அரத்தை சதகுப்பை ஆன நொச்சிச் சாத்தில் அரைத்திளகக் காச்சி யருந்த
வருத்தத் தலைவலி பீனிசமும் தன்றுடன் நீர் ரெத்தம் குலை குலைந்து போகு மெனக்
கூறு.

4. கூறிய பாவட்டை கொண்ட சித்தாமுட்டி வேரோமம் லேலிப் பருத்தி வேர்
நாறுகின்ற நல்மிளகு கூட்டி நலமாய்க் கிசாயமிட சென்ம வாத சுரம் செப்பு,

5. செப்பும் புடல் கோஉட்டம் செய்ய கொத்தமல்லி சுக்கு மெய்ப்புடைய சீரகமும் வில்வ
வேர்
தப்பாத சித்தாமுட்டி வேர் சீராய்க் கசாயமிடப் பித்த சுரம் போகுமெனப்
பேசு.

6. பேசும் பிறண்டையுடன் பின் கண்டங்கத்திரி வேர் வீசரத்தை காஞ்சுரை வேர் வெற்பூலா
மாசில்லாப் பொன்முள்ளி சுக்குப் புட்டாய்க் கசாயமிடச் சென்ம சேற்றும சுரம்
போம் செப்பு.

எரிவாதம்:-

7. செப்பரிய பேரிலந்தை சேர்ந்த யிலை யரைத்து யொப்புடைய காடியுட னரைத்து
மெய்ப்புடையமத்திட்டதைக் கடைந்து வளித்திட்டதைப் புசில் சத்து மெரிவாத மில்லை
தான்.

8. வாய்வுக்கு:-

தானென்றும் வெள்ளுள்ளி தப்பா மவப்பு மித்தி லேஒன்றாங் கண்ணிலிட்டு வேக வைத்து
நானென்று மஞ்சியுடன் கரைத்து யிந்த நீர் குடிக்கில் மஞ்சுத வாய்வுமில்லை மான்.

9. நீரடைப்புக்கு:-

மானே கேள் நீரடைக்கில் வாமும் பச்சரிசியுடன் தானே நீலக் குறிஞ்சிலையும்
பானையிலே ஒக்கக் கசாய மிட்டு தவெண்கார மிடிக்கக் கிடைவுடைக்குங் காண்.

10. கல்லடைப்புக்கு:-

கக்குஞ் சிறுபூளை கார் நெருஞ்சி மாவிலிங்கை வீக்கும் பிரமுட்டி வேருடனே
ஒக்கவே கூட்டி கசாயமிட்டுக் கொள்ளவே கல்லடைப்பு காட்டில் கழன்று விடுங்காண்.

கல்லடைப்புக்கு:-

11. கக்குஞ் சிறுபூளை கார்நெருஞ்சி மாவிலிங்கை வீக்கும் பிரமுட்டி வேருடனே
ஒக்கவே கூட்டி கசாயமிட்டுக் கொள்ளவே கல்லடைப்பு காட்டில் கழன்று விடுங்
காண்.

12. அண்ட வாதத்துக்கு:-

காணும் புனலுவமும் களச்சியின் காயின் பருப்பும் பேணுங் கோக்குடனே பிறந்த
சுக்கு
வேணுமென பன்னீர்க் கசாயம் பருகிற் பருகிய பின் விண்ணிலண்ட வாதம் போம்
விட்டு.

13. விட்டொழி யீர்க்கு மேவு கருவேப்பீர்க்கு முட்ட சுக்கு சீரகமும் மோதகமு
தட்டியிட்டு
காய்ந்த கசாயுங் கொள்ளக் காணுஞ் சீரமும் விசுளி பாய்ந்த கிறுனியும் போம்
பார்.

15. பாரிசைந்த நெல்லி முள்ளி பண்பான கூவிளையும் சீரிசைந்த சீரகமும் சேர்ந்த
சுக்கு
பேரிசைந்த சித்தமுட்டி நெல்பொரியும் சேரக் கசாயமிடில் பித்தம் விட்டுப்
போகுமெனப் பேசு.

16. பேசும் பிறண்டையுடன் பேரிசைந்த வேப்பல்கு மூசபுரோசம் வித்து மோதகமும்
வாசி பன்னி கொள்ளீர் கசாயம் குன்ம வலி கிருமி விள்ளி ரவி விழுந்தோகு மிது.

17. யிதுவென்று முக்குறட்டை வேர் தனில் சுண்ணம் போதமுடன் சின்னியில் புடமிட்டு
சேதியுன்ன வீக்கமுடன் பீலிகையும் மீரிய கோரங்கி மந்தம் பறக்க விட்டு போகு
மெனப்பன்.

18. பண்ணும் பருத்தி விதர் பாரியுள்ள நெல்ப் பொரியும் பெண்ணுஞ் சிறு திப்பிலி
யோடேலம்
நண்ணும் பொடி சர்க்கரை தேனும் போதக் குழைக்கன்ன வெடித்த விக்கல்
சத்தி போம் விரும்பு.

19. பித்த சோம்பல்:-
விரும்புகின்ற சீரகமும் மென்மை பெரு நெல்லி முள்ளி பொருந்து சுக்கு ஏலம் பொ
சரியாய் நிரம்பிடவே
சர்க்கரை நெய்யும் தளரக் குழைத்துண்ண யிக்கன வோத்த சோம்பு மிகு.

20. அஷ்ட குன்மம்:-
சோம்பு சிறுவண்டுந் தய்யதொரு நாயுருவி சாம்பல் மிளகு சரி பொடியாய்
மேம்படவே யிட்டமுடன் கூட்டி யிதனில் களஞ்சி கொள அஷ்ட குன்மம் போகு
மலைந்து.

21. அண்ட வாதம்:-
அலையும் கருவளகி லரத்தை பொடிகலையின் மிளகு பொடித்திடச் சரியாய்
முட்டி மலிலயிற் பெருங்காயம் கூட்டி யுண்ணப் பேரண்ட வாதம் வரும் கார்யம் வாட்டு
மருந்து

22. எரிகுன்மம்:-
வாடுகின்ற யிந்துவுக்குப் பாதி யவட்சாரம் தேடுகின்ற காயமிதில் செம்பாதி
நாடுகின்ற செம்பருத்திச் சாத்தில் செலுத்தீர் செலுதிய பின் வெம்பு மெரி குன்மம்
விரைந்து.

சேத்துமம்:-

23: விரைந்து மிளகரைத்து வெந்நீருடன் கரைத்து அருந்தப் புலியின்னுக்கே
பொருந்து மலங்கிழி சீதமுடன் மலைஞ் சீரணம் வீசு விகுழ்சி பலங் குறைந்து போகு
மெனப் பேசு.

24. பேசு மொழி சங்கிலையும் பேய்ச்சுரையின் தன்னிலையும் வாசமுடன் புட்டாக வைத்து
நேசமுடன் திப்பிலி வெங்காரம் தேன் சிரசு ஆகாசம் ஒப்புடனே ஓடுங் காணாள்.

25. ஓடுகின்ற சாறணையும் மொப்பு மரிதகியும் வாடுகின்ற சுக்கு வகை குடிநீர்
நாடியே மறுக முறகக் குடிக்கில் வாய்வு கரப்பான் வீக்கம் பறுகு பெருகெனப்
போகும் பார்.

26. உள் காச்சல் பித்த கரப்பான்:-
பாரீரே நீர் பிஸியின் பனபேயன் பழச்சுடனே சேரீரோ சர்க்கரையும் சீரகமும்
நாரீரே உண்டாக்கால் போகாதோ உள்க் காச்சல் பிறமியமும் கண்டாக்கால்
பித்தமும் போம் காண்.

27. இருமல்:-
கானீராடாதோடை கண்டங்கத்திரி ஏலசி தோனீர் பெட்டிப் பிலியு அந்தானீ நீர்
நானரிய சுக்குத்தேன யிருமும் காசமுதலீளை பொக்குப் பொக்கென்று போம்.

28. போதீராடாதோடை போந்த தொகு முந்திரிகை சேகீர் குடிநீராய் சேர்த்தி
டீர்
மாதறியா அக்கிருகாரங் கூட்டி யருந் தீரருந்திய பின் முக்காதம் பித்தம் விட்டோ
டும்.

29. ஒரு மாதுளைப் பூச் சாத்திலருந்தே நெய்யால் கூட்டிக் குடவதின் கொழுந்தரைத்து
நாடி மிகப் பரிவாக மூக்கில் விடக் கூந்த ரத்த பித்தம் போம் கூறு.

30. கூறுகின்ற தாளிச பத்திரி சூர் மிளகும் தேடுகின்ற நாகப்பூத் திப்பிலியும்
மீறுகின்ற சுகை நீரேலங் கூட்டிப் பதமாகப் பாகமாய்ச் சூரணத்தைப் பண்.

31. பண்ணிய பின் காரம் பாக பேதனம் கூட்டி யுண்ணக் களஞ்சி தேனிலுண்ண விட்டு
திண்ணமாய் நாவிலிடக் காசமுதல் நண்ணுமரோசிகமும் பவினிடம் விட்டோடிப் போ
ம்.

32. இருமலுக்கு:-
போமே கரு நெல்லி போத்தரிய தான்றி சிங்கி யேமாஞ்சில் கோஉட்டமுடனேல
மாமா திரிகடுகு யிந்துப்பு தேக்குங் கண்டங்காரி மருக விடித்து வடி செய்.

33. செய்தபொடி யிஞ்சி சேரத் தேன் சேர்த்துள்க்கொள்ளப் பய்யக் களஞ்சி பரிந்
துண்ண
வையக்த்தில் குத்தக் குத்தென்றிருமுங் கொல்லும் பீனிச சுவாசந் தத்தித் தத்தி
ஒடுந்தான்.

34. எலி கடிக்கு:-
தானே அடப்பம் விரை தப்பாமலே களஞ்சி பானே நீர் தன்னிலரைத வாங்கிருல்
ஊனே யெழு நாயுரு சிரந்தி யீளை யெலி கடியும் விருமே யென்றை மிக வேண்டு.

சுவாச காச மீளைக்கு:-

35. வேண்டும் பெருங்காயம் வேலிப் பருத்திச் சாறிரண்டும் சென்ற ஆமணக்கு நெய்
தன்னில்
பார்த்தே யெரித்து வடித்துண்ண யீளை சுவாச காசம் பொருந்து வெருண்டோடிப்
போம்.

36. வெறுண மிளகோர் மூன்று வித்தளிஞ்சி லெட்டு திரண்ட பொடி களஞ்சி தேனி
லருந்திட திட்டமுஞ் செய்யுஞ் சுவாச காசமீளை கெட்டுப் பறந்தோடிப் போம்
கேள்.

37. கேளுங் கய்யாந்தகரைச் சாறுங் கீழ்க்காய் மாறு மந்த நல்லெண் ணெயாகக் கறண்டி
நாளெண்ணி தின்னீர் பலநாள் சேற்பமத்தில் பிணித்த உள்ளீர் போம் தேன் மொழியீர் தாது.

38. தாதுவலிப் பழச்சாறு சுத்த நெய்பால் நீரகனி லாதி திரிகடுகு சதகுப்பை சீரகமும்
நீயுடன் ஒக்க யெரித்துண்ண ஒடுங்குஞ்சுவாச காச மூளை முக்குணமே பாறு மியம்பு.

.39. பாறு நாரத்தம் பழச் சாத்தில் திரிபாலையுந் தேறந் திப்பிலி மிளகு தேக்கடனே
வீழசிங்கி தேத்தாம் பழம ரத்தத் தேறுமதி கூட்டி யுண்ண மாத்த சுவாச காசம் மால்.

40. மாலாடா தோடை வந்தாவின் பாலுஞ் சேலாந் திப்பிலி ஆனைத் திப்பிலியும்
மேலாம் சொடிவேலி கேடடனே கூட நவச்சாரம் வடிவாக நீ வேகவை.

41. வேகவைத்து நெய் கொள்ளில் மீருஞ் சுவாச காசம் பாகமாய் ரெத்த பித்தம் பார் பறியுந்தேகத்தில்
வந்த வலி. மேக மற்ற மிகு சுரமும் பிந்தி யென்றதே போம் பிரிந்து.

42. <u>வாத பித்த சேத்தும சுரத்துக்கு</u>:-
பிரிந்து யிள வெந்நீரில் பின்பு முதியார் கூந்தல் அறிந்தே யதனிலரைத்துண்ண
மரிந்த சுரம் வாத பித்த சேத்துமத்தின் கூரார் சுரம் போம் ஒளிர்ந்து.

43. <u>மந்தத்துக்கு</u>:-
ஒளிர்ந்த வெள்ளைக் காக்கணத்தின் வேருங் குளமிளகும் அருந்த வெந்நீரிலரைத்துண்ண
தளர்ந்து மிகப் போமே அசீரணங்கள் பூமிதனி லென்றும் நாமே உரைக்கக் கேள் நன்று.

44. <u>தாகத்துக்கு</u>:-
நன்றுக வேர்க் கொம்பு நற் சாறனை வேறு மொன்றுக் கசாயமிட்டுண்டு விடில்
அன்றேதா -ஒடுமே தாக மியுமே நாடு விட்டு வாடுமே கெட்டு மனம்.

45. மனமே கய்யாந்தகரைச் சாறு மகிழ்சிய முடனவே சுளிக்குந் தினமேறச்
முப்பு வெந்நீரில் கரைத்துண்டவுடன் வாந்தியாந் தப்பும் விக்குளி சமிக்குந்தான்.

46. சமிக்கு மிம்புதனைத் தப்பாமல் காச்சி யமுக்கியே மோரிலருந்த
யமற்களமாய் சந்தோஷம் விளி கன்னீர் தாகஞ் சலவை யெல்லாம் சிறந்து.

47. <u>கரப்பானுக்கு</u>:-
எல்லாக் கிரந்தி யெரும் வாறு வாதபித்தம் பொல்லாத சேற்பமத்தின் பொங்கிஷ
வில்லாகும் நீள் புருவத்தாளே நிறைந்த கரப்பானேறு மெள் புவியிலுள்ளோர்க் கில்வாறு.

48. வாறுகொடி வேலி வன் குறிஞ்சா வெள்ளறுகு கூறு கருவேம்பு குடப்பாலை
யூறஞ் சிவனார் வேம்பு வேர் மருந்த செங்கத்தாரி யாரி மிளகு மிலை கொள்ளக் கரப்பானெலும்.

49. யேகுங் கருநொச்சி யேறளிஞ்சி தாளுகி லாகுங் கரந்தை சின்னி ஆமணக்கும்
பாகமாய் வடியீர் வசம்புள்ளி வாழ் கருகுரோகணியிற்குடியீர் பூசி கரப்பான் கூறும்.

50. கூறுஞ் செங்கத்தாரிப்பட்டை சின்னி கார்மிளகு வீறஞ் சிறு குறிஞ்சா வேர் கூட்டி
காசினியில் வெண்ணெயிற் குடி நீ யெறக்கும் பல கரப்பான் திண்ணுவிட லோமந் தினம்.

51. <u>வீக்கம்</u>:-
தினந் அருவனை சங்கு சுரையுஞ் சிறு நெருஞ்சி மனஞ் தாறுநீர் முள்ளி மாமலையுங்
கனத்தவுடன் வெங்கார மென் பொடியாய் விட்ட குடி நீரருந்து பொங்கான வீக்கம் போகுங் காண்.

52. காரம் யவட்சாரம் கல்விந்தவின் பொடியே யீருள்ளி சீரகமு மிந்திடை சேர்
பார்முற்ற வீக்கம் வந்தாக்கு முண்டாம் மேலும் வசமாகும் நீர்க் கச்சாய்க்கு மல நீர்.

53. மல நீரடக்கி விம்மி வாய்வு கரப்பான் வீக்கம் பலம் போக்காரிகியை புடமிட்டு
நலம்பாகம் கூற களஞ்சோ மத்தின் கட்டிற் சலைவடி சீருண்க் கென்றே நீயின்.

54. தின்றுர் சிறு குறட்டை தேங்காய் திருகி வெந்நீர் தன்னந் தனியே சாறுளக்கு
மின்றுவ கோளா மணக்கு நெய் கடுகுரோகிணியிற் காச்சி யுண்ணச் சாம சத்தி வீக்கம் நீர் சாய்க்கும்.

55. சாய்க்கும்படி கேளாய் தான் கிரந்தி புண் சூலை வாய்க்கும் வயத்து வலி வாய்வு
குட்டமாய் மருந்துண்ணீரு லகத்தி லய்யாத மானிடர்க்குப் பன்னீரிச் சூரணத்தைப் பார்த்து.

56. பார்த்துக கடை மருந்த பஞ்ச கோலம் விளங்கம் சாத்து மிஞ்சீரகந் தன் மேதாமேத்து
பொடியிட்டு பஞ்ச சூரணம் ரெண்டு பங்கு முன் கலந்த தட்டிக் கொட்டித் தின்றுந் தான்.

57. தின்றுந் தேனெய் வெந்நீர் சேர்ந்த பொடி முக்களஞ்சி பண்ணுந் தாளும் பருகி விடி
ரின்னங் கேள் பத்தியம் பால் நெய் கீரைத்தண்டு பலக்குவரை உத்த உள்ளி நற்சுண்டி யுண்.

58. உன்னு மிலவங்க மூநந் திரிகடுகு தின்ன முற்ற நாகப்பூக் திரிப லையும்
பண்ணும் பொடி சேர நன்று.
59. நன்று பொடி முக்களஞ்சு நாளுந் தேன் சர்க்கரையில் தின்று விடிலோ சித்திவிடு
மென்று மீளாமல் கட்டு மிக்க பித்த வாய்வு வெப்புக் கீளாக நோக்கும் கிரந்தி.
60. கிரந்தி கட்டுச் சூலை தன் கேள்க்கு நவச்சாரம் பொருந்து மிந்த போக்கரிய
போத
மருந்து பச்ச நாவி அடப்பம் விரை நற்கோஉட்டம் பான மருவி மேவி நிம்பச் ச
சாத்திவிட மீறும்.
61. மீறு மிலைக்கள்ளினில வேற்த் தோல் தாறுணத்தி தா ளாகவே யிடித்து தூய்ய பொடி
கேளிரண்டு காசத்தினை பொடியைக் காலமே தேனிலுண்ண தேசத்தில் தான்
பொருந்துந் தேற.
62. மகோாரத்துக்கு:-
தேறும் பேய்ப்பீர்க்கங் காய் சிதற நறுக்கி வைத்து சாறு பரிவுடனே தான்
பதங்காய்
கூறுகின்ற பெருங்காயஞ் களஞ்சி நாமூன்றிலான கடு சோற் பெரு மகோதரம்
போஞ் சொல்.
63. சொல்லாய் கருங்கோளி தோல் போக்கி யுள் சதையில் நில்லே முக்கடுகு நெய்
காய
மெல்லா பஞ்சவனத் தயிரில் பண்ணி மெத்துறயிற் குடு கேளஞ்சி மீற சீக்கிரணி
ஆறும்.
64. ஆற முடும்புச் சதையு மன்பான முக்கடுகுங் கூறுங் கொடிவேலி சுர்மிளகு மீறுடைய
உள்ளி வசம்பு நற்சீரொக்கக் கரைத்து மோனிலென்னை கொள்ளுங் கிராணி குணம்.
65. குணமாந்ததையில் கூற் முக்கடுசோமம் கன மாந்திரிப லை கருஞ் சீரகமும் மணமா
கும்
காயங் கருகிந்து காரென்னையிற் காச்சி வாயுவுக் கிராணி போம் வன்னம்.
66. வன்னங் காயங் கடுகுவாறு விந்து நற்பலமுந் தின்னந் தயிரில் செய்குடி நீர்
உன்னுநீர் சுக்குடனே மூன்று பலம் தோல் புங்கஞ் சாரிடையும் தக்க வட்டத் தி
திருப்பி வேர் தான்.
67. வேருங் கிராம்பு மென் சாதிபத்திரியும் சேருங் கச்சோல மாந்திரி ப லையும்
சாருங் கருவேப்பிலையுங் கடுக்கா யவட்சார மென்ன ஆறிய நீர்க் கிராணி யகலும்
68. அகலுமாஞ் சாத்திலான தயிர் நீர் சரியாய் புகலுமுக் கடுகிந்து பொடி விடைய
மிகலும் வடிவுடைய சாதிக்காய் வருமென்னை கொள்ள பொடிபடும் வாய்விக்
கிராணி போமே
69. போற்றும் பிறண்டை சுக்கு பொடி மிளகு திப்பிலியும் மேற்ற மெவட்சார மிங்கு
சீரகமும்
வீற்றிருந்த விடையந் தயிரென்னை வேக வைத்துக் கொள்ள பொடியாய்க் கிராணி
விட்டு போம்.

வாய்வு குன்மம்:-

70. விடுமே பின் கொமட்டிக்காய் வேக வைக்குமுப்பிலையும் மிடுமே கிருவசங்கு
போந்திரிகடுகு மிந்துப்பும் குன்மம்
படும்போது சித்தாமணக்கென்னெ சேர்த்து விடு வாய்வு குன்மம் பெற்றுர் மலங்
களியும் பின்.
71. பின்று மிட்டான் சாத்தில் பொய்தாவி நெய்யில் பன்னுறுங் கிளங்கரைத்துப் பால்
கூட்டிச்
சொன்னபடி பாகமிட்டுத் தின்று விடில் பட்சதோஉஷ தேரை யெருமிரு காமாலை
யேகும்.
72. காமாலை போகுங் கடுக்காய் தான் காச்சிய நீர் நெய் விட்டு
போமே கடுக்காயை போதரைத்து வேமாகில் பக்குவம் பார்த்தே வடித்துன்
பாண்டு பித்தல் காணியறுந் திக்கெனப் போமூலந் திசை.
73. திசையா மூலைப் பாலில் சேரு மென்னை பாதி பசையாம் பஞ்ச திரவியம்
பாரிருவேலி யிசையாம்
குப்பை மஞ்சள் கடுகுரோகிணி யிவை காச்சி யிட வேம்புடனே வேக வை விடும்
ஒரு.

நீர்க் களிச்சலுக்கு:-

74. ஒருமே வெண் குன்றி வேரைத் தோல் போக்கி உள் பருப்பு வாது புளிய விரை
தோல் போக்கி
உள் பருப்பு வாது புளிய விரைத் தேஙலத்திப் பால் வேகை யென்னும் வெ
வென்னை தன்னிலோர் களஞ்சின் வெள்ளை விடுனீர்க் களிச்சல் நின்றுமிடுந்
தேன் மொழியே நோ.

பெரும்பாட்டுக்கு:-

75. நேராக நாவற்றேல் நின்ற வுதியந் தோலும் பேராக நீர் குடிநீர் பின் போ
தி
சீராக ஆவின் பால் நெய் மதுரம் அரைத்து யிளநீர் பாகமிட்டுண் தேவி பெரும்
பாடு விடும் செல்.
76. விப்புருதிக்கு:-
செல்லாத விப்புருதி சேருந் திரிப லையும் செல்லுமெனக் காத்து வட்டத்து
நில்லுமென முன்பு சொன்ன புவரைத்து முத்து நற நெய் பாலில் அன்புடனே
காச்சி யருந்து.

77. அருந்தும் பொழுதே கெற்ப் விப்புருதி யாரம் திருந்த நறு நெய் நாளி
சேத்துவிடுவாய்
வருந்த கள்ளிப் பால் தேருள்க்கு சேத்தே பளம் புளியும் வாய்த்திடுவாய்
சேலொற்ற கண் மடவீர் சேர்த்து.

78. வாதத்துக்கு:-
சேர்ந்திருந்த வாதம் சித்த மருந்தரைக்கில் யெக்கு பிலைக் கள்ளி யெருக்கிலை
யின்
சாத்தரைத்து வேரண்டேரண்டத் தயிலம் விக மறிந்தீர் விடில் அருண்டு விடுமென்றே
யறி.

79. உள்மூலத்துக்கு:-
அறியும் பிறண்டை யிலையாமணக்கந் தாமும் செறியும் புடலருவும் சேர் வேலி
குருகும் பொடியக் கிராக்காரம் போத என்னை தேன் கிடமான மூளும். போம
சேர்.

80. செபெருக்கஞ் சாருடனே சேர்ந்த என்னை சுக்குள்ளி கூர் வசம்பு குன்றி முந்து
கோஉட்டமுடன்
சேருக யிந்துவுடன் திப்பிலியுமே காச்சிக் காதிலிட யுந்தி ஒடு விளிச்சிக் குரை.

81. சன்னிக்கு:-
உரையும் பசும் உள்ளி உற்ற கடுக்காய் திரையும் நாகம் பாம்பு சேர் கண்டம்
கரைய அரைத்து வடித்து வேப்பெண்ணை ஆன சன்னி போகும் தரத்தி விடு மஞ்சு முன்
னாகு.

81. நாறு மதி சாந்து லைய மருந்தரைக்கி லாருமா மாதளையின் வித்தரைத்து
கூசும் ஆவின் பாலில் கொள்ளு அகரும் பதினெட்டுந் தேவின் பாக் மொளியீர் சேர்
த்து.

83. நீரடைப்புக்கு:-
யீருள்ளிச் சாறுலக்கு யேற்ற சாரங் களஞ்சி க்குக் மடத்தி னைசந்தான் களஞ்சி
வார் மூலையா யொன்றாய் விளாவியுட மருந்தக் கல்லடைப்புச் சென்றோடு நீரடைப்
புத் தேடி.

84. தேடுங் கச்சாப் பத்திரியில் சேர் ஜாகு சோகிப் பற்பம் போடு சுட்டுத்
தேசிப் பளச் சாற்றில் கூடு விட மேலிலையாய் மூடி விரும்ப மறு நாளருந்த
வேல் விளியாள் நீரடைப்பு விட்டு.

85. விட்டு செருஞ் சீயின் வேர் வெண் சுரையின் தண்டு சுக்கு
யிட்டு கடு தான்றி கீழ்காய் நெல்லி வேர்
முட்ட சிறுபுளை வேரோடு மிகவுஞ் சிறுகீரை
வானை யென்ற கண்ணார் நீர் வார்த்து.

86. வாத்து நீரெட்டொன்றாய் வத்திய பின் தானி வைத்து யெக்கு வெண்ணை மேல்
போட்டிதை யருந்த
பார்த்து திகைத்தோடு நீரடைப்பு செருகி, றை கல்லடைப்பு பதைத்தோடும் சொன்
னேரும் பரிந்து.

87. பெரும்பாட்டுக்கு:-
பரிந்து முக்காவேளை வேர்ப் பட்டையுமே கட்டி கரிந்து பச்சை நெல்லரிசி கழு
நீரில்
திருந்த வரைத்ததனை முக்களஞ்சி யந்தி சந்தி கொள்ள உரைத்த பெரும்பாடு
விட்டோடும்.

88. ரெத்த மூலத்துக்கு:-
ஒடுங்குளங் கொண்டு உளருகின்ற மங்கையரே தேடு குப்பை மேனி செருப்படியும்
நாடு தனில் கையாந் தகரை கதித்த பொடியாக்கி மெய்யாகத் தேறன்
விரும்பி.

89. விரும்பு ரெத்த மூலம் விரும் கிருணி வரும் பின்னுள் கொள்ள மருந்திரும்பு
கோட்டான் கரந்தை கொடிய நற்சீரகமும் மீட்டெண்ணெயிற் காச்சி யெரும்.

இருமலுக்கு:-

90. யெரு பிறைச்சி யிருமலிலை தனக்கு பாரு நறந் காளிப் பனைவெல்லம்
வாருடனே பச்சரி நெய்யும் பரிவுடனே லேகியஞ் செய் நிச்சயமாந் தன்னிலிலை
நீரும்.

91. வஸ்தி சுரத்துக்கு:-
நீருகின்ற வஸ்தி சுரம் நிச்செயமாய்த் தான் தீரப் பாருகின்ற சென்ன கரப்பளச்
சாத்தில்
சோரு வரிக்கத் தாளையுங் கடுக்காய் கருவேலம் பட்டை பொடியதிலே யிட்டே
யருந்து.

92. அரிய பசும்பாலிலான திருகு கள்ளி யுரிய பால் காச்சிச் சேரொன்றாய்
வருந்த யிரை மத்திட்டதைக் கடைந்து வந்த. வெண்ணை தனில் கொண்டு விடி
யுத்த குன்ம மோடி விடும்.

93. ஒடும் பிள்ளை பெத்த உடன் வயிறு தான் பருத்து கூடுகின்ற சோரையரு கொண்
டெடுக்கால் போடு
சுக்கு வெள்ளை வெங்காயம் மிளகு வேலிப் பருத்தியிலை கொள் மூன்று நாள்
குடிநீர் கொள்.

94. கொள்ளத் திரிபலையுங் கடுங் கரப்பானும் மஞ்சள் வெள்ளாமையோடு மிகு தன்னை
மெள்ளவே நாளானதை யருந்த ஆங்குங் காமாலை யறம் வானை வென்ற கண்ணாய்

95. வருந்த கருவேலந் தோல் மானே யிதல்லால் பிரிந்த கருங் காக்கணத்தின் வேற்தோல்
வருந்தவே மூன்று மாத்திரைக் காடி முன்னீர ரைத் தருந்த தோன்று கெற்ப விப்புறு சோம்பும்.

96. குத்திருமலுக்கு:-
சோம்பு நிலவர்கையின் வேர் தய்ய் திரிகடுகு மாம்பாவி நெய்யினரைத்த தனே
காம்பான தேனிற் குளைத்துண்ண தீருமே குத்திருமல் மானே யிலை தீரும் வண்ணம்.

நீர்க்_கடுப்புக்கு:-

97. வன்ன முத்தக் காசு வறுக தாவாரை விரை திண்ணக் கேத்தான் சேர் விரையும்
பன்றுங் களி புளியங் கொட்டை கடுவிா நீர் சேர்த்துப் பனியில் வைத்துண்ணீர் கடுப்புப் பாறும்.

98. பெரும்பாட்டுக்கு:-
பாரும் பெரும்பாடு பரிவாய்த் தானெடுத்தாலும் ஏறு தேத்தா வேர் வேதிட்டனே
கூழும் பதக்கு நீர் விட்டு பரிவுடனே லேசியமாய் தக்கவே தானருந்த யேகும்.

99. யேகுமே யவுரியிலையின் பருத்தலர்கும் புன்னைக் காயதின் பருப்பு
வாகா யரைத்த மருந்ததைத் தான் னலில் பிசறியுண்ண வருத்த முற்ற பேய் கடியை மாற்றும்.

100. மாத்த நெய்பால் நீர் வள்ளிய மானே யதிச் சாறும் போத்த முத்திய தனின் புடைதோல்
நாற்றிசையில் வந்த மொசுமொசுக்கை மானே நன்னாரியின் வேர் அந்த மாகாளி கிழங்காம்.

101. பெரும்பாட்டுக்கு:-
ஆம் பூமி சர்க்கரையின் ஆன கிழங்கித்துடனே நாம்பூலி நற்பனையு நாடுங்
காம்போத நெய்யில் அரைத்துக் காச்சி நேரே அருந்தி யிட செய்ய பெரும்பா விட்டுச் செல்லும்.

102. நீரடைப்புக்கு:-
செல்லுமே நீரடைக்கில் சேர்ந்த குறிஞ்சா விலையும் கல்லத்திப் பட்டை கடுகுடன்
செல்லுந் திரிகடுகு நாயுருவி சேர் கொளிஞ்சியின் வேரும் உறநீர் விட்டவுடனேகும்

கல்லடைப்புக்கு:-

103. உடனே தான் காச்சி யதனுடன் சோகி சுட்டு திடமாய் வடித்தினி மேற் சேர்த்து
மடநல்லீர் காரமுமே கூட்டி கருதி யருந்திடிலோ கோரமுள்ள கல்லடைப்புக் கூடா.

104. கூடுங் குமரிச் சோறுங் கண்ட கருஞ்சீரகமும் நீடு பஞ்சதாரை தனில் நீர் கூட்டி
போடவே கல்லடைப்பு மாயும் கடிய பொரிகாரமதை அள்ளி யிா வென்னீரில ருந்

105. அருந்தச் சிறு பூளையின் வேர்ரான தோலெல்லாந் திருந்தவே பாலதனிற் சேர்த்து
வருந்தியே நாலா நாளருந்தி விட நாடாதே கல்லடைப்பு பால் மொளியே ஆகுமிது பார்.

பிரமியத்துக்கு:-

106. பாருமே லவ்வளவும் படர்ந்த பிறமியந்தான் சேருமே திப்பிலியும் சித்தரத்தை
நீருமே ஆதளை யிருத்த கிளங்காகு மாலிக் கிளங்காகும் போதவே தான் கூட்டிற் புகல்,

107. தானே வறட்சியிருல் சத்தி யுடம்பு தேறந் தேனே யொருபடி நீர் சேர்த்தடுப்பி மானே
மானே உளக்கார்கக் காச்சி யதிரா ர் வெண்ணை தேசிப் பளத்தளவு போட்டருந்த பாயும்

108. பாயவதின் பிறகு பன்னிருலின்ன மொரு தோயாத சுக்கு மிளகோமம்
காயாத வெள்ளருகு ஈருவளை மீறு கடுக்காய் காய முள்ள சிவனார் வேம்பிருடு

109. ஓடு வெள் நாகனமு மெர்க்கலே தான் கூட்டி நீடு நிழல் தனிலே நீயுணத்தி
கூடவே சூரணமாய்ப் பண்ணி யிதைக் கொள்ளாய் வெருகடிதான் காரத்திருள்ள படி காண்.

110. அன்பு துளசிச் சாறுமான தோர் சக்கரையும் மின்புத்த தேசிப் பழச் சாறிதெல்
முன்பு தாறுன்னவே பித்த மெய்யலோடு மெனவே யுரைத்த வண்ணமிது வென்று ஓசெப்பீர் மான்:

111. காச்சல்_குன்மத்துக்கு:-
செப்பு பொருந்தும்பயிற் செருங் கொருந்து சுக்கோ டொப்பு வெள் வெங்காமிளகோமமுடன்
தப்பாமல் வசம்புடனே கூட்டி வரு மெருமை மோரில் வசம்படக் காச்சி குன்மமாயும்.

112. பாயுங் களச்சிப் பருப்புடனே சாறணை வேர் மிளகு சுக்கோடிந்தந்த
வீயும் பெருங்காயம் வெள்ளுள்ளி பின் வசம்பு கூட்டிச் சரியாய் நவ பாண்டந் தன்னில்.

வாய்வு தம்பனத்துக்கு:-

113. தன்னிலைரைத்த தலைத் தானே வெள்ளாட்டின் பால் பின்னே யெட்டொன்றுகவே வைத்து
சொன்னேனிதை யருந்த வாயுவுடனேத்த தோர் தம்பனமும் பதை பமைத்தோடும் பார்.

114. பாரு மிங்கு வெள்ளருகு பார் மிகுந்த சுண்ணம்புஞ் சேர் முருங்கைப் பட்டையு மொன்றுகச் சேர்த்து
கூறு மருந்ததனை யுண்டு விட வாத சுரோணிதமுந் திருந்தாம்லேரடு மிதைச் செய்வாய்.

115. கல்லடைப்புக்கு:-
செய்யும் பிறண்டையின் வேர் சேருகின்ற சாறனை வேர் கொய்யுஞ் சிராம்பு கோலரிசி
அய்யமற்ற சிங்கி பொன்முங்காணி வேர். தேனே குடி நீரருந்த தங்கு கல்லடைப்பு விழுந்தான்.

116. சூலை சொறி போக:-
தானே நல்லெண்ணெயுடன் சாதிலிங்கம் வெள்ளருகு தானே நல்லெண்ணெதனிற் சேர்த்த பின்னு
மானே அறிவுடனே காச்சி யருந்தவே சூலை சொறி சிரங்கு போமெனவே சொல்.

117. அரையாப்புக்கு:-
சொல்லுங் கொடிவேலி தூய்ய வேர் சர்க்கரையும் வல்ல பெருங்காயம் வசம்புடனே
நல்லதோர் வெள் வெங்காயந் துருசு வேண்டு நல்லெண்ணெயிற் கொள்ளரையாப் போடு மிதையுங் கூறு.

118. இருமலுக்கு:-
கூறுஞ் சனல் வேர் கொளிஞ்சி வேர் நொச்சி வேர் மாறு முக்காலேனை வேர் சித்தாமுட்டி
யாரும் பெருந்தலைக் கஞ்சாங் கோரை புங்கு சங்கு வேருங் கூடியதோர் வேப்பலகு காண்.

119. காணுங் கடுக்காய் கூடியதோர் திப்பிலியும் பூணும் பாரத். துளசி போதவே வேணுமென
வேலிப் பருத்தி திராய் வேணுமே நல்மிளகு பால் மொளியே. நாலுரைத்தேன் பங்கு.

120. ரெத்த மேகத்துக்கு:-
பன்னுவ--யும் பண்பு பதினென் மருந்தந் தங்கு நீர் நாலிலொன்றய்க் கான் காச்சி
சங்கையாய்க் கொண்டு விடத் தானிருமல் கூடாமலேகும் பெண் வண்டனி மாதே யுரைத்தேன் வாய்.

121. வாராய் முருங்கையின் பூ வண்மையுள்ள கத்தாளை சோறுடனுய் வெண்ணெயுட னெக்கவே
கூறுடனே உண்ணவே ரெத்த பித்தம் மோடும் பிரமேகம் விண்ணிலே பாயுமுடல் விட்டு.

122. எரி குன்மத்துக்கு:-
விட்டெனவே வெள்ளாட்டின் பாலில் மின்னே தேங்காய் பாலிலே விட்டே தான் திப்பிலி யிந்துப்புந்
தட்டியே பாங்காகக் காச்சியே பதமாச்வே யருந்த போங்கா னெரி குன்மம் புகல்.

123. புகலுமே செவியமும் புதிய திரிகடுகு மிள்களவாய் விளங்க மதிரேடகரும்
கருஞ்சீரகம் சித்தரத்தை கஸ்தூ ரி மஞ்சள் திருந்த திப்பிலி மூலஞ் சேர்.

124. சேருஞ் சிலை நொச்சி சேர்ந்த பட்டைச் சாறுடனே கூறும் வெள்ளாட்டின் பால் கூடரைத்து
நேரான நல்லெண்ணெயிற் காச்சி நன்றாய் முழுகி வரச் சொல்லப் பின்னீர்ப் பாச்சலோடும்.

பீனிசத்துக்கு:-

125. ஒடும் நத்தைச் சூரியுற வேருடைய வேரும் நாடும் வேலிப்பருத்தி நல்வேரும்
கூடுமே ஆ தவளை வேரும் தலங்கு விழாய் பாகலெனவே மீற வலம். பட்டை யேறு.

126. யேறு வேப்பம் பட்டை யேற்ற கடுக்காய் மிளகு நாளும் வெள்ளுள்ளி யுடனுட்டியே
கூறும் வசம்புடனே திப்பிலியும் வந்த குப்பை மேனிக் கசங்காத் துத்தியின் வேர் காணும்.

127. காணு மருந்தெல்லாங் கல்ல மதிலே யரைத்து பூணு. நல்லெண்ணெயிற் பூண்டெரித்து
வேணுமென உள்ளநுந்தி மேல் பூச ஒடுமே சுரமும் கள்ளமுள்ள சன்னியது கண்டு.

128. கண்டு கோழிக் காரமுடன் கானுமே சோகியிட்டு விண்டாவி நெய் கட்டி வெய்யில் வைத்து
பண்டு காண் உள்ளுஞ் செலுத்தி விடு மோடு அன் மாங்கிஉடமும் கல்லமாய் நீச் சிவப்பகலும்.

129. **நீரளிவுக்கு:-**

தேத்தான் விரை கடுக்காய் செப்பரிய ஆவரை வேர் நேத்த விளாம்பிசி நேடித்த னையுஞ்
சேர்த்தொடியாய் பங்கொன்ற காலாய்ப் பசுவின் மோரில் பருக பொங்கி வரும் நீரளிவு போகும்.

130. வல்ல சுரமது போம் மாந்தமொடு தோஉடம் போம் சொல்லவொரு மேக சோகை போ
நல்லாய் கேள் தால வெல்லஞ் சுக்குடனே சத்து நிலக் குமிள் வேர் காலமே யுண்ணக் சான்.

131. முற்றும்.

பின்னிணைப்பிலுள்ள மருந்துகள் சில வருமாறு.

பரதேசியாய் சொன்ன யெண்ணை விபர மறியும்படி சகல வியாதிக்கும் ஆகும்:-

ஆவாரம் பட்டை பலம்.20, சதுவாத்தி வேர்ப் பட்டை பலம்.15, அத்திப் பட்டை பலம்.5, அமுக்கிலாங் கிழங்கு பலம்.5, நத்தி வேர் பலம்.5, அப்பை கோவைக் கிழங்கு பலம்.5, கருந் துவரைப் பட்டை பலம்.5, அருகம் வேர் பலம்.5, நாவலை வேர் பலம்.5, மணத்தக்காளிச் சாறு படி.க, பொன்னுங்காணிச் சாறு படி.க, முடக் கொத்தான் சாறு படி.க, வில்வயிலைச் சாறு படி.க, பழம் பாசிச் சாறு படி.க, காறுவேளை சாறு படி.க, கத்தாழஞ் சாறு படி.க, மிதிபாகல் சாறு படி.க, மிளகு பலம்.க, சீரகம் பலம்.க, மாகாளிக் கிழங்கு பலம்.4, மாகாளியிலை, கடுக்காய் பலம்.க, தானிக்காய் பலம்.க, சீதாசெங்கழுநீர் கிழங்கு பலம்.க, சாதிக்காய் பலம்.க, யேலம் பலம்.க, காசுக் கட்டி பலம்.க, சித்தாமணக் கெண்ணை.க, பசுவின் பால் படி.5, இளநீர் படி.5, வெங்காரம்.க, கல்மதம் பலம்.க, கற்பூர சலாசத்து பலம்.க, கல்நார் பலம்.க, யெரிப்பு ஆவாரை விறகு.

கட்டளை யெண்ணை:-

சித்தாமணக் கெண்ணை படி.4, கெருடன் கிழங்குப் பொடி படி.உ, ஈர வெங்காயம் பொடி படி.உ, சிவனார் வேம்பு பொடி படி.க, வெள்ளறுகு பொடி படி.க, கருஞ்சீரகம் பலம்.உ, பறங்கிப் பட்டை பலம்.உ, சாதிக்காய் விராகனிடை.க, கிராம்பு விராகனிடை.க, எரிப்பு ஆவாரை விறகு இப்படி அறியவும்.

மேகத்துக்கு:-

பலகறை 27, துளசிச் சாத்தில் ஊறப் போட்டு அதை யெடுத்து வைத்துக் கொண்டு தாளகம் 9 பலகறை.9 முறைக்கு ஒன்று ரெண்டாக தட்டி அதில் பத்து எலுமிச்சம் பழச் சாறு பிழிந்து மேல் சட்டி மூடி உறியில் வைக்கவும். மறுநாள் எடுக்க நீறிப் போகும். அதைக் கையில் ஊத்திக் குடிக்கவும். இந்தப் படி மூன்று நாள் கொடுக்கவும். நாலா நாள் முழுகவும். சீரகம் வறுத்த ஈர வெங்காயம் பாக்களவு கூடப் போட்டு தண்ணீர் விட்டுக் காச்சி கசாயம் ஆக்கிக் கொடுக்கவும். பத்து நாளைக்கு கரப்பான் பதார்த்தம் ஆகாது. இதுக்குத் தீரும் வியாதி மேகம், வெளுப்பு கருப்பு, சிவப்பு, அண்ட வாதம் தீரும்.

பித்தத்துக்கு:-

பஞ்சதாரை நாற் களஞ்சி, பகரு மதுர முக்களஞ்சி, யிஞ்சி, திப்பிலி யிரு களஞ்சி, யேலந் தானும் ஒரு களஞ்சி ஐந்துங் கூட்டிப் பொடி செய்து ஆவின் பாலில் கொள்வீராய் நெஞ்சில் பித்தம், நாற்பதுவும் நில்லாதோடுங் கண்டீரே.

வால சஞ்சீவி குளிகை:-

சாதிலிங்கம் விராகனிடை.க, வெண்காரம் விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைக்கிறது.

⁂⁂

சு.ச:8.4.64. முற்றும்

⁂⁂